## மாமன்றக் கூட்டம்

**கோப்பு எண் - ந.க.எண் 8033/2018/ எம்.சி. 8 )**

**நாள் - 24.08.2018 காலை 10.00 மணி**

**தலைமை - டாக்டர் க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,**
**ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**கலந்துகொண்டோர் - துணை ஆணையர்,**
**அனைத்து துறை தலைமைகள்,**
**அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்**

---

## பொருள் எண் 1

| | |
|---|---|
| **பொருள் :** | கோயம்புத்தூர் மாநகராட்சி – வருவாய்ப் பிரிவு –– 01.04.2018 முதல் சொத்துவரி பொதுச் சீராய்வு நடைமுறைப்படுத்துதல் - அரசாணைகளை பதிவு செய்து மேல் நடவடிக்கை எடுத்தல் - மாமன்றத்தின் அனுமதி கோருவது – தொடர்பாக. |
| **பார்வை :** | 1. அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19.07.2018.<br>2. அரசாணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 26.07.2018. |

-------------

பார்வை(1)ல் காணும் அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A.IV) துறை நாள்.19.07.2018ல், நடப்பாண்டு 01.04.2018 முதல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% வரையிலும், வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% வரையிலும் சொத்துவரி பொதுச் சீராய்வு நடைமுறைப் படுத்தப்பட உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பார்வை(2)ல் காணும் அரசாணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A.IV) துறை நாள்.26.07.2018ல், மேற்படி சொத்துவரி சீராய்வு தொடர்பாக பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A.IV) துறை நாள்.19.07.2018யை திருத்தம் செய்து வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% வரையிலும் சொத்துவரி பொது சீராய்வு நடைமுறைப்படுத்தப்படும் என்ற பகுதியை நீக்கம் செய்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி அரசாணைகளை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் சமர்ப்பிக்கவும், 01.04.2018 முதல் மேற்படி சொத்துவரி பொதுச் சீராய்வு நடைமுறைப் படுத்துதல் தொடர்பான அறிவிப்பினை உள்ளூர் நாளிதழிகளில் மற்றும் மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், மாவட்ட ஆட்சியாளர் / மாநகராட்சி பிரதான மற்றும் மண்டல அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்குண்டான அனைத்து விளம்பர செலவினங்களை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.6943/2018/எம்.ஏ1

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டங்களை செயல்படுத்த **52** எண்ணிக்கையிலான பணியிடங்களை மாநகராட்சியில் தோற்றுவிக்க அரசாணை எண் **(2டி) 105**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் **(மாந4)** துறை நாள் **26.06.2007**ல் அனுமதி அளிக்கப்பட்டது. ஏற்கனவே கோயம்புத்தூர் மாநகராட்சி தனது மாமன்றத் தீர்மான எண் **56**, நாள் **14.07.2009**ல் மேற்படி பணியிடங்களுக்கு ஒப்புதல் வழங்கி அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டது. அதனடிப்படையில் அரசாணை **(2டி)** எண் **129**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் **(மாந4)** துறை நாள் **18.12.2009**ல் ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட **52** எண்ணிக்கையிலான பணியிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ.எண் | பணியிடங்களின் பெயர் | தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கண்காணிப்புப் பொறியாளர் | 1 |
| 2 | நிர்வாகப்பொறியாளர் | 2 |
| 3 | உதவி நிர்வாகப்பொறியாளர் | 4 |
| 4 | உதவி பொறியாளர் / இளம் பொறியாளர் | 8 |
| 5 | வரைவு அலுவலர் | 4 |
| 6 | தொழில்நுட்ப உதவியாளர் | 16 |
| 7 | கணக்கு அலுவலர் | 1 |
| 8 | கண்காணிப்பாளர் | 2 |
| 9 | உதவியாளர் | 4 |
| 10 | இளநிலை உதவியாளர் | 2 |
| 11 | கணினி இயக்குநர் | 2 |
| 12 | உதவி திட்ட அலுலவர் | 1 |
| 13 | நகரமைப்பு அலுவலர் | 1 |
| 14 | மண்டல திட்ட அலுவலர் | 4 |
| | மொத்தம் | 52 |

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தில் கீழ்கண்ட திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளது.

1. பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம்
2. திடக்கழிவு மேலாண்மை திட்டம்
3. மழைநீர் வடிகால் திட்டம்

பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் சிப்பம் **1** மற்றும் **2** ஆகியவற்றில் எடுக்கப்பட்ட பணிகள் முடிக்கப்பட்டு தற்சமயம் பொதுமக்களுக்கு வீட்டிணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. சிப்பம் **3** ன் கீழ் எடுக்கப்பட்ட பணியில் **4.91** கி. மீட்டர் நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய் பதிக்க தேசிய நெடுஞ்சாலைத் துறையின்அனுமதி பெறப்பட்டு தற்பொழுது பணி நடைபெற்று வருகிறது. இப்பணியை விரைவில் முடித்து பொது மக்களுக்கு வீட்டிணைப்புகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உக்கடம் மற்றும் ஒண்டிபுதூர் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இயக்கம் மற்றும் பாராமரிப்பு (Operation & Maintenance) பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகிறது. மேலும் நஞ்சுண்டாபுரம் பகுதியில் அமைக்கப்படவிருந்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப்பணிகள் அருகில் வசிப்போரின் எதிர்ப்பால் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. தற்பொழுது தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் இறுதி தீர்ப்பு கோவை மாநகராட்சிக்கு சாதகமாக வழங்கப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்ட பணிகளை மீண்டும் துவங்க வரும் **20.09.2018**ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது. அதன் பின்னர் பணிகள் துவங்கி போர்க்கால அடிப்படையில் பணிகளை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டப்பணிகளுடன் சேர்த்து மத்திய மத்திய அரசின் அம்ருட் (AMRUT) மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டம் (SMART CITIES MISSION) ஆகிய புதிய திட்டங்களின் கீழ் இம்மாநகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் எடுக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

1) **24**x7 குடிநீர் பணிகள் ரூ. **556.57** கோடி மதிப்பில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் **24** மணி நேரமும் பொது மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்கும் (24 X 7 Water Supply Scheme) விதம் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டப்பணிக்கான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அதற்கான முதற்கட்ட ஆய்வுப்பணிகள் (Survey Work) துவங்கப்பட்டு தற்பொழுது நடைபெற்று வருகின்றது.

2) கோவை மாநகராட்சி ஆர்.எஸ். புரம், டி.பி ரோடு (R.S. Puram DB Road) பகுதியில் அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம் (Multi Level Car Parking) அமைக்க ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்டு தமிழக அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரும் 27.09.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படவுள்ளது.

3) இம்மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட சங்கனூர் பள்ளத்தினை சீரமைக்கும் திட்டப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நிதி ஆதாரத்திற்கான காத்திருப்பில் உள்ளது. திட்டத்திற்கான நிதி கிடைக்கப் பெற்றவுடன் பணிகள் துவக்கப்படவுள்ளது.

இதில் அம்ருட் (AMRUT) திட்டத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்டப்பணிகளை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1) கோவை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளுதல்.
2) கோவை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொள்ளுதல்.
3) கோவை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் திட்டப்பணிகள் மேற்கொள்ளுதல்.
4) பூங்காக்களை மேம்படுத்துதல் (Improvements to Parks).
5) சுகாதார மேலாண்மைப்பணிகள் (Septage Management).

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் முதன்மைப்பணியாக இம்மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட உள்ள எட்டு குளங்களை புனரமைக்கப்பட்டு அதன் கரையோரங்களில் மோட்டார் அல்லாத வாகன பயன்பாட்டுக்கான (Non-Motorized Transport) பாதை அமைக்கப்படவுள்ளது. மேலும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கீழ்காணும் புதிய திட்டங்களை செயல்படுத்தப்படவுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | குளங்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு பகுதி – உடனடி செயல்பாட்டு திட்டப்பணிகள் (QUICK WIN PROJECTS) | |
| | அ) பெரியகுளம் குளக்கரையில் நடைபயிற்சி பாதை அமைத்தல் | 39.74 |
| | ஆ) வாலாங்குளம் குளக்கரையின் குறுக்கே நடைபயிற்சி பாதை அமைத்தல் | 24.31 |
| | இ) வாலாங்குளம் மேம்பாலத்தின் கீழ் உள்ள பகுதிகளை மேம்பாடு செய்தல் | 23.83 |
| 2 | மாதிரி சாலை – ஆர்.எஸ். புரம் D. B. சாலை | 24.71 |
| 3 | குளங்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு பகுதி – II (தோராயமாக) | 456.00 |
| 4 | வ.உ.சி . உயிரியியல் பூங்கா மேம்பாடு (தோராயமாக) | 25.00 |
| 5 | எம். ஜி. ஆர் தினசரி மொத்த விலை அங்காடி இடமாற்றம் | 40.00 |
| 6 | நுண் எருவாக்கல் மையங்கள் அமைத்தல் | 6.62 |
| 7 | உக்கடம் மற்றும் கவுண்டம்பாளையம் பகுதியில் சூரிய மின் உற்பத்தி நிலையம் அமைத்தல் | 11. 54 |
| 8 | பசுமை பகுதிகளை உருவாக்குதல் (Place Making) | 5.00 |
| 9 | பகுதி சார்ந்த வளர்ச்சி திட்ட பகுதியான வார்டு எண்கள் 73 மற்றும் 74 ல் பாதாள சாக்கடை அமைத்தல் | 10.00 |

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்தீர்மான எண். 456 நாள் 08.03.2017ல் மேற்படி ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்ட திட்டங்களை முழுமையாக நிறைவேற்றவும், AMRUT, SMART CITIES MISSION ஆகிய பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தவும், அரசாணை எண் (2டி) 105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை நாள் 26.06.2007ல் அனுமதி அளிக்கப்பட்ட 52 எண்ணிக்கையிலான பணிடங்களுக்கு அனுமதி வழங்கவும், 01.08.2016 முதல் 31.03.2020 வரை கால நீட்டிப்பு செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கியதனை தொடர்ந்து 17.03.2017 தேதியிட்ட இவ்வலுவலக கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி

வைக்கப்பட்டது. ஆனால் அரசாணை எண். (டி) 333 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந4) துறை நாள் 14.08.2018ல் கோவை மாநகராட்சிக்கு கீழ்கண்ட பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள 28 பணியிடங்களுக்கு மட்டுமே 01.08.2016 முதல் 31.03.2018 வரையிலான காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ.எண் | பணியிடங்களின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | செயற் பொறியாளர் | 1 |
| 2 | உதவி செயற் பொறியாளர் | 6 |
| 3 | உதவி பொறியாளர் / இளம் பொறியாளர் | 2 |
| 4 | வரைவு அலுவலர் | 2 |
| 5 | தொழில்நுட்ப உதவியாளர் | 11 |
| 6 | கணக்கு அலுவலர் | 1 |
| 7 | கண்காணிப்பாளர் | 2 |
| 8 | உதவியாளர் | 1 |
| 9 | இளநிலை உதவியாளர் | 2 |
| | மொத்தம் | 28 |

மேற்கூறிய அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள 28 பணியிடங்களை கொண்டு கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத்திட்டப்பணிகளுடன் சேர்த்து மத்திய அரசின் அம்ருட் (AMRUT) மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டம் (SMART CITIES MISSION) ஆகிய ரூ. 1427.33 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களை திறன்பட செயல்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்நுட்ப பணியிடங்களான கண்காணிப்பு பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர்/ இளநிலை பொறியாளர், வரைவு அலுவலர், தொழில்நுட்ப உதவியாளர் ஆகிய பணியிடங்களுடன் அமைச்சுப்பணியிடங்களான கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் புள்ளி விபரக்குறிப்பாளர் ஆகிய பணியிடங்களை அவசியம் நிரப்பப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத்திட்டப்பணிகளுடன் சேர்த்து மத்திய அரசின் அம்ருட் (AMRUT) மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டம் (SMART CITIES MISSION) ஆகிய ரூ. 1427.33 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களை திறன்பட செயல்படுத்த கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள 37 பணியிடங்களுக்கு 01.04.2018 முதல் 31.03.2020 வரை கால நீட்டிப்பு செய்ய அரசிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியிடங்களின் பெயர் | ஏற்கனவே 31.03.2018 வரை அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | தற்சமயம் 01.04.2018 முதல் 31.03.2020 வரை திருத்திய அனுமதி கோரும் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கண்காணிப்புப் பொறியாளர் | 0 | 1 |
| 2 | நிர்வாகப்பொறியாளர் | 1 | 2 |
| 3 | உதவி நிர்வாகப்பொறியாளர் | 6 | 4 |
| 4 | உதவி பொறியாளர் / இளம் பொறியாளர் | 2 | 8 |
| 5 | வரைவு அலுவலர் | 2 | 2 |
| 6 | தொழில்நுட்ப உதவியாளர் | 11 | 10 |
| 7 | கணக்கு அலுவலர் | 1 | 1 |
| 8 | கண்காணிப்பாளர் | 2 | 1 |
| 9 | உதவியாளர் | 1 | 2 |
| 10 | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் | 2 | 4 |
| 11 | புள்ளி விபரக்குறிப்பாளர் | 0 | 2 |
| | மொத்தம் | 28 | 37 |

ந.க.எண். 10906/2008/ஜே.என்4 அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்

-----------------------------------------------------------------------------------------------------------